**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 13 |
| Name | : | மருத்துவர் திரு. நந்தகுமார் |
| Father Name | : | திரு. சண்முகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.10.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

**நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05-09-2022 அன்று மேற்படி மருத்துவமனையில் அலுவலில் இருந்தபோது கவுந்தப்பாடி காவல்நிலைய கு.எண். 265/2022 வழக்கில் இறந்துபோன 35 வயதுடைய சுஜின் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி மேற்படி காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை த.கா.**

2230 ரியாஸ் அகமது என்பவர் மூலமாக காலை 10 மணி அளவில் பெற்று பிரேதத்தை அங்க மச்ச அடையாளங்களை சரிபார்த்து 10.10 மணி அளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். அப்போது பிரேதத்தின் உடல் முழுவதும் பிண விறைப்பு தன்மை காணப்பட்டது. இறந்தவர் உடலில் சிவப்பு, கருப்பு, ஆரஞ்ச் மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட டி-சர்ட்-ம், சிவப்பு நிற வேட்டியும் உடலில் இருந்தது. காயந்துபோன ரத்த படிவங்கள் தலை, முகம், உடலின் முன் மற்றும் பின்பகுதி, மற்றும் இரண்டு கைகளிலும் காணப்பட்டது. இடது காது பகுதியில் காய்ந்துபோன ரத்த படிவம் காணப்பட்டது. கை மற்றும் கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. பிரேதத்தின்மீது கீழ்காணும் இறப்பிற்கு முன்னால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. சிவப்பு நிற சிராய்ப்பு காயத்துடன் கூடிய கன்றிய காயமானது 17x1 செ.மீ அளவிலும், தசை அளவு ஆழத்திலும் இடதுபக்க புஜத்தின் கீழ் பகுதியிலிருந்து இடது கெண்டை கையின் மேல்பகுதி வரை காணப்பட்டது. தலையை அறுத்து ஆய்வு செய்தபோது சிவப்பு நிற கன்றிய காயமானது 13 x 4 cm, அளவில் இடது பக்க முன், பக்கவாட்டு மற்றும் இடதுபக்க உச்சி மண்டை பகுதியில் காணப்பட்டது. இடதுபக்க கன்னபொட்டு தசை கன்றி காணப்பட்டது. மண்டை ஓட்டில் எலும்பு முறிவானது 10x 4x 1 செ.மீ அளவில் இடது பக்க முன், பக்கவாட்டு, மற்றும் இடதுபக்க உச்சி மண்டை ஓட்டு பகுதியில் காணப்பட்டது. மூளையில் பரவிய ரத்தமானது மூளையின் வெளிப்புற சவ்விற்கு கீழேயும், நடு சவ்விற்கு கீழேயும், மூளை முழுவதும் காணப்பட்டது. மூளையைஅறுத்து பார்க்கும்போது வெளிறி காணப்பட்டது. மண்டை ஓட்டியின் அடிபகுதி, நடு மண்டை ஓடு, இரண்டு பக்கங்களிலும் உடைந்து காணப்பட்டது. கழுத்தை அறுத்து ஆய்வு செய்தபோது நாவடி எலும்பு , குரல்வளை, மூச்சு குழாய்

மற்றும் தைராய்டு குறுத்தெலும்பு இயல்பாக காணப்பட்டது. நெஞ்சு பகுதியை அறுத்து ஆய்வு செய்தபோது நெஞ்சின் இருபகுதியிலும் காலியாக காணப்பட்டது. நெஞ்சு பகுதியில் உள்ள எலும்புகள் மற்றும் உள்ளுறுப்புகள் இயல்பாக காணப்பட்டன. இருதயத்தை அறுத்து பார்க்கும்போது இருதயத்தின் அனைத்து அறைகளிலும் சில மி.லி அளவுள்ள திரவ ரத்தம் காணப்பட்டது. இருதய தமனிகள் சீராக இருந்தது. நுரையீரலை அறுத்து பார்க்கும்போது வெளிறி காணப்பட்டது. வயிற்று பகுதியை அறுத்து பார்க்கும்போது இரைப்பையில் 300 கி. அளவுள்ள அடர் சாம்பல் நிற பகுதி செரிமானம் ஆன உணவு துகள்கள் எவ்வித நெடியும் இல்லாமல் காணப்பட்டது. இரைப்பையின் உட்சவ்வு வெளிறி காணப்பட்டது. சிறுகுடலில் 10 மிலி அளவுள்ள பித்தநீர் கலந்த திரவம் எவ்வித நெடியும் இல்லாமல் காணப்பட்டது. சிறுகுடலின் உட்சவ்வு வெளிறி காணப்பட்டது. கல்லீரல் ., மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக காணப்பட்டது. அதை அறுத்து பார்க்கும்போது வெளிறி காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. இடுப்பு பகுதி எலும்பு , தண்டுவடம், மற்றும் பிறப்புறுப்புகள் இயல்பாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்வுக்காகவும், ரத்தமாதிரியானது குருதி வகை கண்டறிவதற்காகவும் சேகரித்து அனுப்பப்பட்டது. எனது கருத்துரையில் இறப்பானது தலையில் ஏற்பட்ட காயத்தினால் உண்டான அதிகப்படியான ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் ஏற்பட்டுள்ளது என்றும், இறப்பானது குளிர்சாதன பெட்டியில் பிரேததத்தை வைப்பதற்கு 12 முதல் 24 மணிநேரத்திற்குள் ஏற்பட்டிருக்ககூடும் என்று சான்று வழங்கினேன். ரசாயன பகுப்பாய்வு ஆய்வகத்திடமிருந்து அறிக்கை பெற்று இறுதி கருத்துரை வழங்கினேன். அதில் இறப்பிற்கான காரணம் பிரேத பரிசோதனை

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுதான் என்றும், உள்ளுறுப்புகளில் மதுவோ அல்லது இதர நச்சுதன்மையுள்ள பொருட்களோ கண்டறியப்படவில்லை என்றும் சான்று வழங்கினேன். **நான் வழங்கிய உடற்கூராய்வு சான்றிதழ் அ.சா.ஆ.9. எனது இறுதி கருத்துரை அ.சா.ஆ.10.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது உடற்கூராய்வு சான்றிதழை ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால்சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது இறந்த நபருக்கு ஏற்பட்ட காயமானது எந்தவகை ஆயுதங்களால் ஏற்பட்டது என்று எனது கருத்துரையை கேட்கவில்லை என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.

**மறு விசாரணை இல்லை.**